மலேசியத் தமிழ்ப் புலவர் சங்கம், மலேசியத் தமிழ்க்கவிதை வளர்மன்றம்,
மலேசியத் தமிழ்க்கல்வியாளர் மகிழ்மன்றம் &
புளோரிடா சர்வதேச பல்கலைக்கழக தமிழ் மற்றும் புலம்பெயர் தமிழர் நிறுவனம்

*வழங்கும்*

# கவிஞர்களைக் கொண்டாடுவோம் - 11

## மணிக்கவிஞர் பாதாசன் கவியரங்கம் 2023

Date / தேதி | June 7, 2023
Time / நேரம் | 8:30 PM (MST) | 8:30 AM (EST) | 06:00 PM (IST)
Venue / இடம் | Google Meet https://meet.google.com/odg-ziec-mqa
Entrance / அனுமதி | FREE / இலவசம்



சிறப்புரை
மணிக்கவிஞர் பாதாசன்

நிகழ்ச்சி நெறியாளர்



கவிஞர்
மகிழன் கணேசன்

வரவேற்புரை



சுசிலா மாணிக்கம்
தூதுவர்
தமிழ் – புலம்பெயர்
தமிழர் நிறுவனம், மயாமி



கவியரங்கத் தலைவர்
கவிஞர்
சரவணன் இராமச்சந்திரன்

### கவி பாடும் கவிக்குயில்கள்



கவித்திலகம்
பாவலர் கோவதன்



செந்துறைக் கவிஞர்
சோலை முருகன்



பாவலர்
மா. தமிழன்பன்

### கவி பாடும் தளிர்கள்



குமாரி
வான்மதி வரதராஜன்



குமாரி
அருள்மொழி சேகரன்

Malaysian Tamil Poets Academy,
Malaysian Tamil Poem Appreciative Club, Malaysian Tamil Academics Appreciative Association,
and Tamilkuyilar-Rugmani Endowment for Malaysian Tamilar Diaspora Studies
at the Florida International University Institute Initiative for
Tamil and Tamilar Diaspora Studies

*Present*

# "Celebrating the Legacy of Poets - 11"

**Honoring Manikavinjar Pathaasan**

தொகுப்பு: தரிசினி காளிதாசன் & பேராசிரியர் முனைவர் க. கலைமதி, MSc, PhD, MPH

### தமிழ் வணக்கம்

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வானம் மளந்த தனைத்து அளந்திடும்
வன்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
என்றென்றும் வாழியவே!



எழுத்தாளர் சுசீலா மாணிக்கம்
தூதுவர்
தமிழ் மற்றும் புலம்பெயர் தமிழர் ஆய்வு நிறுவனம்

### வரவேற்புரை

கூடியிருக்கும் அனைத்து சான்றோர்களுக்கும் முதற்கண் வணக்கங்கள். அகண்ட பிரபஞ்ச வெளியில் தமிழ் எனும் உயிரிழையால் நாம் அனைவரும் இணைந்திருப்பது நம் மொழியின் பேராற்றலையும் பேராண்மையையும் எண்ணி எண்ணி நம்மை மேலும் மேலும் பெருமிதம் கொள்ளச் செய்கிறது.

மலேசியத் தமிழ் புலவர் சங்கம், மலேசியத் தமிழ்க்கவிதை வளர் மன்றம், மலேசியத் தமிழ்க் கல்வியாளர் மகிழ் மன்றம் இவர்களுடன் இணைந்து புளோரிடா பன்னாட்டு பல்கலைக்கழக தமிழ் மற்றும் புலம்பெயர் தமிழர் நிறுவனமும் இந்த பதினொன்றாம் "கவிஞர்களை கொண்டாடுவோம்" எனும் நிகழ்வை நிகழ்த்துவதில் மகிழ்கிறது. அதிலும் மணிக்கவிஞர் பாதாசன் அவர்களின் கவியரங்கமாய் பதிவு செய்வதில் மேலும் சிறப்பு பெறுகிறது.

வந்து குவிந்த கவிதைகளில் சிறந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்துத் தந்து சிறப்புரை தர இசைத்திருக்கும் மணிக்கவிஞர் பாதாசன் அவர்களை வரவேற்கிறோம். கவியரங்கத்துக்கு தலைமையேற்று சிறப்பாக நடத்தி தர இசைந்திருக்கும் கவியரங்கத் தலைவர் கவிஞர் சரவணன் ராமச்சந்திரன் அவர்களை வரவேற்கிறோம். இந்த சிறப்புமிக்க கவியரங்க நிகழ்வில் கவி பாட வந்திருக்கும் கவிஞர்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்தி வரவேற்கிறோம்.

தமிழ்க்குயில் கலியபெருமாள் ருக்மணி அறக்கட்டளை, தமிழ் மற்றும் புலம்பெயர் தமிழர் நிறுவனம், புளோரிடா பன்னாட்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து தமிழ் மொழியைப் பரப்புவதற்கு பல்வேறு நிலைகளில் தன் பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றது. அவற்றுள் ஒன்றுதான் இந்தக் கவியரங்க நிகழ்வு.

நம் ஆதித்தமிழனின் மொழியையும் அதன் தொன்மை கலை கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றை உலகம் முழுதும் பறைசாற்ற பல வழிகளில் பல தளங்களில் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். மலேசிய மக்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டு மேலும் மேலும் இப்பணிகளைச் சிறப்புற செய்ய வேண்டும் என்பதே எங்களின் எண்ணம் என்பதையும் இங்கு பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

நம் மணிக்கவிஞர் பாதாசன் அவர்களின் "தாய் மொழியே மூச்சாம்" எனும் தலைப்பில் முத்தான வரிகள் சிலவற்றை இங்கு பதிவு செய்து விடைபெற விரும்புகின்றோம்.

உலகத்தின் முதல்மனித உயிராய்த் தோன்றி
உடலாக, உணர்வாக உலவுகின்ற

உலகத்தின் முதல்மனிதன் தமிழனுக்கே
உயிராக, உடலாக, உணர்வுமாக

நிலைபெற்ற தாய்மொழியாம் தமிழே உன்னை
நினையாதார்; கல்லாதார்; மூச்சே இல்லார்.

சிலைபோன்றார்; உயிரிருந்தும் செத்தார் போல்வார்!
செத்தவரும் உயிர்பெறத்தாய் மொழியே மூச்சாம்!

ஆம் ஐயா தாய்மொழி நமக்கெல்லாம் உயிர் மூச்சு தான்...
மீண்டும் ஒருமுறை அனைவரையும் வாழ்த்தி வரவேற்று அமர்கிறோம் நன்றி

## இறை வணக்கம்

ஒப்பெதும் இல்லை ஒளிர்விடும் அழகன்
ஓதிட நிறைமதி தருவான்!
தப்பெதும் செய்தால் தடுத்திடும் அறிவன்
தகையுறு பெருமதி தருவான்!
உப்பென உணவில் உணர்வென மனத்தில்
உறைந்தவன் நிறைந்தவன் முருகன்!
முப்பெருந் தமிழை முழுமனம் நிறைய
முகிழ்த்தவன் முதலவன் முருகன்!

அடியவர் வணங்க அனைத்துயிர் விளங்க
அரசனாய் ஆண்டியாய் வந்தான்!
விடியலாய் வந்து வெளிச்சமும் தந்து
வினைகளை அறுத்திடச் செய்வான்!
மடிதுயில் களைந்து கொடுந்துயர் நீக்க
மலைதொறும் அருள்மழை பொழிவான்!
கொடியவர் வீழ கொடுமைகள் தாழ
குலமகன் மலைமகன் அருள்வான்!

## தமிழ் வணக்கம்

மறையெல்லாம் உரைத்தநல்ல மனைமொழியே போற்றி!
மனமெல்லாம் நிறைந்தநல்ல மறைமொழியே போற்றி!
சிறைபிடிக்க நினைத்தவரைச் சிதறடித்தாய் போற்றி!
சிறைபுகுந்தால் நிலைபுகழைத் தரும்மொழியே போற்றி!
கறையில்லாக் கனியின்ப கவின்மொழியே போற்றி!
கரைசேர்க்க உதித்தநல்ல கதிர்மொழியே போற்றி!
இறையெனக்கு வரைந்தநல்ல இயல்மொழியே போற்றி!
இசையமுதம் அளித்தநல்ல முதல்மொழியே போற்றி!

## குரு வணக்கம்

களிப்புடனே யாப்பதனைக் கற்றிடவே எனக்குக்
கரம்நீட்டி வழிகாட்ட அமைந்தாரே ஐயா!
தெளிவதனைப் புகுத்தியென்றன் கிறுக்கல்கள் அனைத்தும்
தேர்ந்தநல்ல கவிதைகளாய் அமைத்தாரே அம்மா!
உளிகொண்டு செதுக்கியெனை உருப்பெறவே செய்தார்;
உளமார தலைவணங்கி நன்றியினைச் சொல்வேன்!
ஒளியேற்றி இருளகற்றி மரபுகவி விதையை
உலகினிலே நான்விதைத்து மரமாக்கிச் செல்வேன்!

## அவை வணக்கம்

கரையோரம் கிளிஞ்சல்கள் பொறுக்கிநின்ற ஒருவன்
கவிதையெனக் கிறுக்கல்கள் ஆக்கிநின்ற ஒருவன்
அரைப்படிப்புத் தான்கற்ற குறையறிவு சிறுவன்
அரங்கத்தின் தலைவனென நிற்கின்றேன் இன்றே!
உரைப்பதற்குச் சொல்லில்லை பெரியோர்கள் நிறைந்த
ஒப்பற்ற பேரவையை வணங்குகின்றேன் அடியேன்!
உரைப்பதிலே குறையிருப்பின் பொறுத்தருள வேண்டும்
ஒன்றுபட்டுச் செந்தமிழை வளர்த்திடவே வேண்டும்!



கவிஞர் சரவணன் இராமச்சந்திரன்

## பாதாசனார் வாழ்க!

நாட்டு நடப்புகளை விளக்கிநாளும்
நல்ல பலகவிதை ஈந்திடுவார்!
காட்டு வளமனைத்தும் நலம்பெறவே
கருணை மனுபலவும் போட்டிடுவார்!
கூட்டு முறையாலே இனமுயரக்
கூடும் எனப்பாடம் நடத்திடுவார்!
பாட்டுத் திறத்தாலே தமிழினத்தைப்
பாரில் உயர்த்திடும்நல் வழிகாண்பார்!

## மலேசியப் பாவேந்தர்

விழியாய் மொழியை எண்ணிப் படிப்பார்
விடியல் தோறும் கவிதை வடிப்பார்!
மொழிக்கோ இன்னல் நேர்ந்தால் துடிப்பார்
முதற்கண் அதனைக் கவியால் அடிப்பார்!
பழிக்கோ அஞ்சி நடக்கும் உளத்தார்
பண்பில் உயர்ந்து பறக்கும் வளத்தார்!
வழிக்கோ துணையாய் வரும்நல் மனத்தார்
வாழ்வில் வளம்சேர் தமிழின் இனத்தார்!

நாட்டில் சிறந்த கவிஞர் படையுள்
நன்மை பலவும் நாடும் தாசன்!
வீட்டில் தமிழைப் போற்றி அதனை
வீதி தோறும் வேண்டும் வாசன்!
ஏட்டில் தமிழை என்றும் நாட்டி
ஏற்றங் காணும் வழியால் சிறந்தார்!
பாட்டின் பொருளைப் பலவாய் மாற்றிப்
பாவின் வேந்தர் என்றே உயர்ந்தார்!

### செந்துறைக் கவிஞர் சோலை முருகன்

காலைக் கதிரின் சுடரொளியாய்க்
கவிதை கொண்டு வரும்முருகன்!
மாலைத் தேநீர் சுவைப்பதுபோல்
மயக்கும் கவிதை தரும்முருகன்!
கோலை நிமிர்த்தி அரசாளும்
கொள்கை நிறைந்த நவகவிதை!
சோலை முருகன் தரும்கவிதை
சோதி முருகன் அருள்கவிதை!

கவிஞர் சரவணன் இராமச்சந்திரன்

### இறை வாழ்த்து

இறையருளைத் துணைகொண்டால் எமன்வரினும் ஏது பயம்?
நிறையமுதாய் வாழ்வளிப்பான் நெஞ்சினிக்கத் தமிழளிப்பான்
கரைகடக்க வேல்வருமே கலிதீர்க்கும் கந்தனருள்
குறைகளையும் தீர்த்திடுவான் குமரனையே சரணடைவோம்!

### தமிழ் வாழ்த்து

காலமதில் வரமுற்றோம் கன்னித்தாய் கனிமொழியே
ஞாலமதில் ஞானமதை நலம்வாழ விதைப்பவளே
வாழ்வினிலே குறளமுதை வழிகாட்டி ஒளியானாய்ப்
பால்நிலவே பைந்தமிழே பாருலகைக் கடைத்தேற்றே!

### குரு வாழ்த்து

ஈன்றோரால் உலகுற்றேன் இனிதான இனமுற்றேன்
சான்றோனே சற்குருவே சகலகலை ஊட்டிவித்தோய்
ஆன்றோர்தம் வழிவந்த அன்புருவாம் இராமதாசர்
தேனொத்த திருமகனின் திருவடியைப் பணிகின்றேன்!

### தலைமை வாழ்த்து

அருந்தமிழை அகம்வைத்தோர் அளப்பரிய பேறுபெற்றார்
பெரும்புலவர் சரவணனார் இராமசந்திரன் புகழ்வாழ்க!
கரும்புநிகர் கவியரங்கம் கமழ்ந்திடவே பாதந்தோம்
பெருமகனார் பாதாசன் பேரறிவைப் போற்றிடுவோம்!

### அவையடக்கம்

அம்புலிக்கு அவாவுற்ற அகமறியா மழலைநான்
கம்பனெனக் கவிபாட கல்விநிறை கலைமகளோ
நம்பியுமே அவைவந்தேன் நற்றமிழின் உந்துதலால்
அம்மையப்பன் அருளுடையோர் அடியேனின் பிழைபொறுப்பீர்!



செந்துறைக் கவிஞர் சோலைமுருகன்

### மணிக்கவிஞர் பாதாசன்

கனிசொட்டும் களிகொள்ளும் இவரின் பாட்டுக்
கள்ளமிகுத் தமிழ்ப்பகைக்கு வைக்கும் வேட்டுத்
தனித்தன்மை ஓங்குவிக்கும் அறிவின் சின்னம்
தன்மானம் சீறிவரும் மரபின் வண்ணம்
பனித்தூவல் தேன்சிந்தும் தமிழின் வாசம்
பாரதியார் வழிவந்த புரட்சி நேசன்
இனமானம் பெருக்கெடுக்கும் எழுச்சி மிக்கோன்
எம்முயிராம் செந்தமிழாய் வாழ்க மாதோ!

எழுத்தசைகள் சீர்தளைகள் யாப்பைக் காப்பார்
என்னாளும் பிரியாத தமிழாய் வாழ்வார்!
பழுத்தபலா சுவைததும்ப உவகை நல்கும்
பழுதில்லா மனத்துணிவு புலியாய்ப் பாயும் !
கழுத்தளவு துயர்காணின் கலங்கா நெஞ்சம்
காலமதில் அவர்தியாகம் போற்றச் செய்யும்!
முழுநிலவின் பூரணமாய் முழுமை காணும்
மூதறிஞர் பாதாசன் அமுதும் தேனாம்!

பிறவியிலே தமிழ்க்கற்றார் பெருமை யுற்றார்
பேச்செல்லாம் பாதாசன் கவியாய் ஆனார்
அருவியிலே புரண்டோடும் நீரைப் போலே
அகம்நிறைந்த தமிழ்ப்புனல் பாயும் தன்னால்
செருக்கறியார் சினமில்லார் செம்மை யாளர்
திருந்தாத தமிழர்தம் சிந்தை நொந்தார்
அருமைமிகுக் கணைக்கவியால் கருத்தை ஆள்வார்
ஆருயிராய் இனமொழியை அரணாய்க் காப்பார்!

மலைநாடு கண்டெடுத்த புலமை முத்து
மாணிக்கப் பேரொளியாய் மதிக்கும் சொத்தாய்
அலைபாயா மனவடக்கம் அன்பே உள்ளம்
ஆலமர விழுதெனவே வேழம் போன்றோன்
விலையில்லா வைரமென விளைந்த ஞானம்
வீறுடைய நூல்படைப்பால் மேரு வானோன்
நிலையான குறிக்கோளை நெஞ்சில் தைத்தோன்
நெறிதவறா செங்கோலாய் நிமிர்ந்து வாழ்வான்!

## பாவலர் தமிழன்பன்

காலைக் கதிரின் சுடரொளியாய்க்
தமிழ்நலத்தைப் பாடஇவர் தமிழ்கொண்டு வந்தார்
தமிழர்தம் தலையெழுத்தை மாற்றிடவே நினைத்தார்
தமிழதனை அரியணையில் அமர்த்திடவே உழைத்தார்
தமிழ்க்கவிதை வழியதனைச் சிறப்புடனே செய்தார்!
தமிழன்னை மடியினிலே பிள்ளையெனத் தவழ்ந்தார்
தமிழன்பன் எனும்பெயரைத் தான்பெற்று வென்றார்!
தமிழ்க்கடலில் பிறந்தநல்ல முத்துகளுள் ஒருவர்
தவறாமல் கவியரங்கில் பாடுகின்ற அன்பர்!
கவிஞர் சரவணன் இராமச்சந்திரன்

## இறைவணக்கம்

தென்மொழியின் உட்பொருளை உணரு மாற்றல்
தென்னைக்குள் சேர்ந்தொளிரும் இளநீர் போலும்
என்மனத்தில் ஒருபோழ்தும் நீங்கி டாமல்
எல்லாமும் நன்குறவே அமைய லுற்றுத்
தன்மனத்தைச் செம்மையாக்கிக் கவிய ரங்கில்
தலைநிமிர்ந்து பாடவைக்கும் செந்தில் வேலா
மின்னிகர்க்கும் நெடுவேலின் துணையி னாலே
மிகுவரத்தை நிதமளித்துக் காப்பாய் நீயே!

## தமிழ்த்தாய் வாழ்த்து

அகரத்தை முதன்மையாக்கி அகிலத்தை யாளும்
அருந்தமிழே! திராவிடத்தின் மூத்தமொழி நீயே!
சிகரத்தைத் தொட்டுவிட்ட நின்புகழை யறிந்தும்
தீங்கிழைக்கும் வானவில்லின் புறக்கணிப்புப் ஏனோ?
பகரத்தான் முடியாதப் பதருக்கு நிகரார்
பைந்தமிழை மறைவாக அழிப்பதுதான் என்னே!
உகரத்தின் நல்லுயிரே! உனக்கில்லை அழிவே!
உலகுள்ள வரையினிதே வாழ்வாயே நீடு!

## குருவணக்கம்

இலையுதிர்ந்த மரமாக நானிருந்த போதும்
எனையணைத்துத் தமிழ்க்கவிதை பாடவைத்தாய் நன்றே
கலைமலிந்த தமிழ்மொழியின் இலக்கணத்தைக் கற்க
கடிமலராய்த் துணையிருந்த நல்லவரென்றன் குருவே
அலையெனவே எனைநோக்கி வந்திட்ட நூல்கள்
அத்தனையும் தமிழ்த்தென்றல் திருவி.கா வின்பேர்
நிலைபுகழ்ப் பாடிப்பகத்தைத் தோற்றுவித்தப் பயனால்
நிமிர்ந்திங்கே பாடவந்தேன், குருமாரின் துணையால்!

## அவையடக்கம்

செய்யும்நற் கவிகள் யாவும் சித்தத்தின் சுடராய்ச் சேர,
உய்யத்தான் துணையாய் நிற்கும் ஒப்பிலா அவையி னோரே !
வையத்தில் நிலைத்து வாழ வாகுறப் புறத்தே இங்கு,
மெய்யத்தான் செவிம டுக்கும் மேன்மைகொள் நெஞ்சே வாழ்க!



பாவலர் மா. தமிழன்பன்

## மணிக்கவிஞர் பாதாசன்

மூண்டெழு முணர்வி னோடு
மீளாமல் கவிவ ரையும்
தூண்டெழும் மனத்தி னாலே
தீங்கிலா படைப்ப ளிக்கும்
ஈண்டுள கவிஞர்க் குள்ளே
எந்தமிழ்ப் பாவின் தாசன்
நீண்டுள தமிழின் தொண்டு
நிலையுள வரலா றாகும்!
கூட்டுணர் வூட்டி நித்தம்
கொள்கையில் விலகா தென்றும்
வீட்டுணர் வோடு நன்றே
வியப்புறும் நாட்டு ணர்வை
ஏட்டினில் மணக்க வைக்கும்
எந்தமிழ் மொழியி னுக்காம்!
பாட்டினில் பொருளு மான
பாதாசன் வாழி நீடு!

தடையை நீக்கத் தடமறிந் தினிதே
தன்னுணர் வுடனே எழுதும் பாக்கள்
நடையை மாற்றும் நல்வழிக் காட்டும்
நன்னெறி யாவும் நயமுட னாளும்
படையை நிமிர்த்தும் ஆளுமைத் திறத்தால்
படைப்புக ளென்றும் பைந்தமிழ்ச் சொத்தாம்
குடையாய் நன்குறும் மன்பதை கிவரின்
குன்றா தெழுத்து நறுநிழ லாகும்!

விரல்களி னாலே வீரஞ் செறிந்த
வீறுடைக் கருத்தை விருத்த மாக்கி,
அருவிக ளெனவே அகமுறச் செய்தே
அலம்பு மாமணி நிகரொளி போலும்
அரியநல் மரபினில் எழுதிக் குவிக்கும்
அருந்தமி ழாசான் பாதாசன் என்பேன் !
உரியநற் கவிதை யரங்கில் அன்னார்
ஒப்பிலா பாடுபொருள் நிலைக்கும் இனிதே!

## பாவலர் கோவதன்!

சுவரில்லாச் சித்திரமும் உண்டா இங்கு?
சுடரில்லாச் சூரியனும் கண்ட துண்டா?
தவறாமல் காலைவரும் கதிரைப் போல
தவறாமல் கவிபடைக்கும் கவிஞர் நீங்கள்!
இவரில்லாக் கவியரங்கம் கண்ட தில்லை
இவர்கவிதை தமிழ்பெருமை சொல்லும் எல்லை!
தவப்பயனால் கிடைத்தநல்ல கவிதை வேளே
தரமிகுந்த கவிதைகளின் கோவின் கோவே!
கவிஞர் சரவணன் இராமச்சந்திரன்

## இறை வணக்கம்

இரவுபகல் விடியலெல்லாம் எல்லாமும் உன்னாலே
இடிமின்னல் இயற்கைவளம் இவைகூறும் உம்பேரை
பரமேசன் தவப்புதல்வா கரிமுகத் தாண்டவனே
பாட்டரங்கில் புகழோங்க பார்வையதை அருளிடுவாய் !

## தமிழ் வாழ்த்து

விழியாய் எமக்குள் விளங்கிச் சுடரும்
மொழியாம் தமிழே முதல் !

## குரு வணக்கம்

பொருள்கூட்டிக் கவிஎழுதும் புலமை தன்னை
புகட்டிகவி ஞானம்தந்த குருவின் தாளை
அருட்கவியால் பாடிப்பண் சாற்றி மேலும்
ஆயிரமாய் மலர்சூடி வணங்கி னேனே !

## அவைத் தலைவர் வாழ்த்து

பாவலர்கள் பாட்டை எல்லாம்
படித்தாய்ந்து பாராட் டும்நம்
காவலராம் அவைத்த லைவர்
கவனத்தில் நின்று பாட்டுத்
தூவலதைத் தூவு கின்றோம்
துலங்குகவி பாடு கின்றோம்
நாவலராம் அவைத்த லைவர்
நலமோங்கி வாழ்க மாதோ !

## அவையடக்கம்

செவிகுளிரப் பாடுபவர் சிந்தனையைப் பாராட்டும்
அவையோர்கள் அனைவருக்கும் அடியேனின் நல்வணக்கம்
கவியரங்கப் பாவலருள் கடைக்குட்டி என்பாட்டில்
தவிப்படங்க வில்லையெனில் தமியேனைப் பொறுத்தருள்வீர்!



பாவலர் கோவதன்

## ஆறுமுகம் என்றாலே

மாறுமுகம் இல்லாத மாகவிஞர் எங்கள்
மணிக்கவிஞர் பாதாசன் மாண்புகளைச் சொல்வோர்
ஏறுமுகம் கொண்டவர்கள் என்பதுண்மை ஐயா
எண்சீரும் எழுசீரும் ஏங்கிடுமே மெய்யாய் !
ஆறுமுகம் என்றாலே அறியாதார் இல்லை
அவராற்றல் கூறிடுமே அருத்தமிழாம் முல்லை
சீறுவதும் பாரதியின் சிறப்புகளில் ஒன்று
சினமூண்டால் பாதாசன் அவர்பங்கும் உண்டு !

இனமுயரக் கவிபாடும் எம்கவிதை எல்லோன்
இனச்சாடல் புரிவோரை எதிர்த்தெறியும் வல்லோன்
மனமுயர்ந்து பாராட்டும் மாக்குன்றம் என்பேன்
மரியாதை ஒழுக்கத்தின் மாமன்ன ரென்பேன்
புனலுக்கும் ஒப்பான புத்துணர்வின் ஊற்றுப்
பூங்கவிதை வாயிலுக்(கு) இவர்தென்றல் காற்று
வினவுகின்ற கேள்விக்கோர் உயர்பதிலைச் சொல்வார்
விருதுகளில் மயங்காத பாதாசன் வல்லார் !

நண்பனெனும் நாளிதழில் பணிபுரிந்த சீலர்
நான்கண்ட மணிக்கவிஞர் பாதாசன் தீரர்
கண்பட்டுப் போகுமய்யா இவர்கவிதை கேட்டால்
காதல்குயில் கண்ணசைக்கும் பாதாசன் பாட்டால்
எண்பதையும் கடந்தாலும் இவர்கவிஞ ரேறு
எங்களுக்கும் குருவானார் இதைமறுப்பார் யாரு?
பண்பட்டக் கவிஞரெனப் பலபே ருள்ளார்
பாதாசன் மணிக்கவிஞர் பலபாவாய் நின்றார் !

## கவிபாடும் தளிர்கள்

புவிசிறக்க கவிவடிக்கும் பாவேந்தர் உள்ளம்;
பொல்வினைகள் கண்டுவிட்டால் எழுதுகோலும் துள்ளும்!
கவியரங்க நிகழ்ச்சியிலே கவிபாட தளிர்கள் காத்திருக்க;
தமிழ்நெஞ்சம் ஆவலாய்ப்பூத் திருக்க!
குவித்திடுவோம் இருகரமும் இவர்தமிழை வணங்கிக்
கொண்டாடி மகிழ்ந்திடுவோம் இவர்கவிதைக் கேட்டு!
கவிவேந்தர் பாதாசன் கவிதையினைப் படைக்க
கவித்தளிர்கள் வான்மதியும் அருள்மொழியும் வருக!

*கவிஞர் சரவணன் இராமச்சந்திரன்*



### குமாரி வான்மதி வரதராஜன்

### காடு

கல்தோன்றி மண்தோன்றிக் கடின மாகிக்
காசினியை உருச்செய்த பின்னர்ப் பச்சைப்
புல்தோன்றிச் செடிதோன்றிக் கொடியும் தோன்றிப்
பூதமென வளர்ச்சியுள மரமும் தோன்றி
எல்லாமொன் றாய்ச்சேர்ந்து வீசுங் காற்று
எரிகதிரோன் குளிர் நிலவாள் நுழையா வண்ணம்
வல்லடர்த்தி இருள் சேர்ந்த தென்பாம் காடே
மனிதகுல முதல் தலையோர் வாழ்ந்த வீடே!

காட்டிலுள்ள நன்மரங்கள் வீடாய் மாறும்
கனிகளெலாம் நமக்குணவாய்ச் சுவைகொ டுக்கும்!
பாட்டிசைக்க நமக்கெல்லாம் கற்றுத் தந்த
பறவைவருந் தும்தம்மின் கூட்டில் வாழ்ந்து
ஆட்டத்தை மயில்பாம்பு மானின் கூட்டம்
அவற்றிடம்நாம் கற்றோமே; எண்ணிப் பார்த்தால்
காட்டிலுள்ள ஒவ்வொன்றும் பயனை நல்க
நாட்டிலுள்ள நாம்யார்க்கும் பயனற் றோமே!

நண்பகலில் காடுபெறும் இருளே இன்று
நந்தமிழின் இருளாம்; நள் விரவுப் போதில்
சொன்ன.அந்தக் காட்டினிலே சேரி ருட்டுத்
துயருறுநம் தமிழ்க்குலத்து வாழ்வி ருட்டே!
நண்பகலில் நள்ளிரவில் அமைதி யின்றி
நடுக்காட்டில் பலசத்தம் கேட்டல் போல
ஒன்றுபடும் குணமில்லாத் தமிழ் மக்கள்
உறையுமிடத் தில்நாளும் சத்தம் கேட்கும்.



### குமாரி அருள்மொழி சேகரன்

### வாழ்வுரைக்கும் ஆசிரியன்

வாழ்வுக்குத் தேவைஎவை? அவற்றை ஆயந்து
வரையறுத்துக் குறையறுத்துத் தொகுத்த ளித்தார்;
ஆழ்ந்துரைத்த திரிகால ஞானி; பாரில்
அன்றுமுதல் என்றுமுள மாந்தாக் கெல்லாம்
வாழ்வுரைக்கும் ஆசிரியன்; அறிஞன்; எங்கள்
வள்ளுவனார் எனிலெவரும் மறுப்பார் இல்லை!
காழ்ப்புணர்வே வாழ்வெனவும் கொண்டா ருள்ளும்
கடுகளவும் வள்ளுவனை வெறுப்பார் இல்லை!

திருக்குறளால் தமிழ்க்குரலை உலக முற்றும்
திசையெட்டும் தென்றலென ஒலிக்கச் செய்தான்!
பெருவயிறோன் கங்கைகொண்ட குடம்க விழ்ந்தே
பெருங்கடலில் கலக்கவைத்த செயலைப் போன்றே,
அருந்தமிழாம் அமுதத்தைக் குறளின் மூலம்
அகிலத்து முந்நீரில் பாய்ச்சி விட்டான்!
குறள்வடிவாய் உலகமெலாம் தமிழ்ப்ப யிர்கள்
குறையறவே வளர்வதற்குக் கதிராய் வந்தான்!

உலகத்தார்க் கென்றிருக்கும் குறட்க ருத்தும்
ஓண்டமிழர் வாழ்விலென்றும் தொடர்ந்தி ருந்தால்,
உலகத்தார் எனில் அவர்கள் தமிழர் என்றே
உரைத்திடுதல் உலகவழக் கென்றிருக்கும்!
உலகமெனில் தொல்காப்பி யமேயு ரைக்கும்
உயர்சான்றோர் தமிழரெனச் சான்றிருக்கும்!
நலம்பெறுக, தமிழினமே! குறளே என்றும்
நல்வாழ்வு நமக்களிக்கும் என்று ணர்ந்தே!



**கவிஞர் சரவணன் இராமச்சந்திரன்**

## நன்றி நவில்தல்

தொன்கவிதை மரபதனில் தெள்ளுதமிழ் வெள்ளம்!
　　தொன்மையினைத் தொடருவதில் மகிழ்ந்திடுமே உள்ளம்!
நன்கவிதைச் சோலையிலே நற்கவிதை கொய்தோம்!
　　நற்றமிழால் பாதாசனார் மனங்குளிரச் செய்தோம்!
பொன்கவிதை என்றேதாம் பொறித்திடலாம் ஏட்டில்!
　　பொலிவுறுமே இனிமரபும் நமதுமலை நாட்டில்!
என்கவிதை வழியின்று நன்றியினைச் சொல்வோம்!
　　இன்தமிழின் வழிநின்று அனைவருமே வெல்வோம்!

நன்றி, வணக்கம்
தமிழோடு உயர்வோம்!